TC - 158

**138/DM/19**

| பதிவு எண் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMETAL EXAMINATIONS

## DEPARTMENTAL TEST FOR MEMBERS OF THE STAFF OF THE TAMIL NADU KHADI AND VILLAGE INDUSTRIES BOARD-FIRST PAPER ON GANDHIJI'S COLLECTED WORKS VOLUME – V (TAMIL)

## (TAMIL VERSION ONLY)

(Without Books)

Maximum Time : 2 hours | Maximum Marks : 80

## ***IMPORTANT INSTRUCTIONS***

### கொள்குறி வகை வினாத்தாள்

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB :** இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. இவ்வினாத்தாள் 80 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

3. விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (அ) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

   (ஆ) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

   (இ) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

   (ஈ) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

1. காந்திஜி தறிகள் தினமும் எத்தனை மணி நேரம் நெய்வார்?

(A) நான்கைந்து (B) இரண்டு மணி

(C) 6 மணி (D) 8 மணி

2. தேநீர் குடிக்கும் பழக்கத்தை இந்தியாவிற்கு கொண்டு வந்தவர் யார் என மகாத்மா குறிப்பிடுகிறார்?

(A) லார்டு ஹார்டிஞ்ச் (B) கார்டினல் ஜான்

(C) லார்டு கர்ஸான் (D) 1 செயிண்ட் பிலீப்

3. சர்வதேச தீர்மானத்தின்படி ஏற்றுக்கொண்ட நிர்மாண திட்டத்தின் மொத்த அம்சங்கள் எத்தனை?

(A) 20 (B) 21

(C) 22 (D) 23

4. காந்தியும் வல்லபாய் பட்டேலும் எங்கு கைது செய்யப்பட்டனர்?

(A) சென்னை (B) பம்பாய்

(C) மதுரை (D) குஜராத்

5. காந்திஜி மானேஜிங் ஏஜண்டுகள் என யாரை குறிப்பிட்டார்?

(A) ஐரோப்பியர் (B) பிரிட்டிஷ்காரர்

(C) ஆங்கிலேயர் (D) இலங்கையர்

6. மாதிரி பண்ணையை நமக்கு யார் காட்டுவதாக காந்திஜி தெரிவித்தார்?

(A) ஸர் கங்காராம் (B) ராம் மோகன்ராய்

(C) டென்னிசன் (D) மில்டன்

7. "கதரை உற்பத்தி செய்யாமல் போனால் இந்த ஆபத்து உண்மையான நேரம் போகும் ஆபத்தே" அதன் வழிகளில் முக்கியமானது எது என காந்திஜி குறிப்பிடுகிறார்?

(A) கூலிக்காக நூற்பது (B) தியாகமாக நூற்பது

(C) நமக்காக என்று நூற்பது (D) நாட்டுக்காக நூற்பது

8. ராட்டை மேன்மை குறித்த புள்ளி விபரங்களை காட்டியவர் யார்?

(A) ஜே.ஸி. போஸ் (B) ஜே.ஸி. குமரப்பா

(C) தேசாய் (D) படேல்

9. ''அல்லாவுத் அக்பர்'' என்ற கோஷத்தை கேட்டதும் யாருக்கு உணர்ச்சி எழுகிறது என்று காந்திஜி கூறினார்?

(A) இந்துக்கள்
(B) முஸ்லீம்கள்
(C) கிறிஸ்தவர்கள்
(D) சீக்கியர்கள்

10. வேதங்களின் ராட்டை என்ற புத்தகம் எந்த மொழியில் எழுதப்பட்டது?

(A) தமிழ்
(B) தெலுங்கு
(C) ஹிந்தி
(D) பெங்காலி

11. இந்தியாவை காண வேண்டுமென்றால் எத்தனை லட்சம் கிராமங்களில் காண முடியும் என்று காந்திஜி உறுதியளித்தார்?

(A) ஏழு
(B) ஐந்து
(C) ஆறு
(D) எட்டு

12. புகையிலை பயிர் செய்ய அயல்நாட்டில் பயிற்சி பெற்று வர இம்பீரியல் புகையிலை கம்பெனி 2 மாணவர்களுக்கு உபகார சம்பளம் எவ்வளவு தர முன் வந்தது?

(A) 100 பவுன்
(B) 200 பவுன்
(C) 500 பவுன்
(D) 400 பவுன்

13. இந்திய நாட்டின் மெய்காவலராம் என்று காந்திஜி எதனை குறிப்பிடுகிறார்?

(A) கோதாவரி நதி
(B) இமயமலை கங்கை நதி
(C) வங்காள விரிகுடா
(D) காவேரி நதி

14. எது காய்ச்சுவதால் செலவுக்கு தகுந்த பலன் கிடைப்பதில்லை என சிலர் கூறுவதாக காந்திஜி தெரிவித்தார்?

(A) கருப்பட்டி
(B) வெல்லம்
(C) சர்க்கரை
(D) சீனி

15. கதருக்கு அத்தாட்சி அளிப்பதற்கு அதிகாரமுள்ள ஒரே ஸ்தாபனம் எது?

(A) காங்கிரஸ் கமிட்டி
(B) நூற்போர் சங்கம்
(C) நெய்வோர் சங்கம்
(D) அகில இந்திய நூற்போர் சங்கம்

16. நிர்மாண திட்டத்தின் ஒரு பகுதியாக இருப்பது எது?

(A) நெசவு செய்வது
(B) நூற்பது
(C) பாவு போடுதல்
(D) விற்பனை செய்வது

17. கதரே நமது விடுதலையின் சின்னம் என கூறியவர் யார்?

(A) வல்லபாய் படேல்
(B) காந்திஜி
(C) ஜவஹர்லால் நேரு
(D) இராஜாஜி

18. காந்திஜி நூற்பதற்கு மணிக்கு எவ்வளவு கிடைக்க முயற்சிக்க வேண்டுமென கூறினார்?

(A) ஓர் அணா
(B) ஒன்றை அணா
(C) கால் அணா
(D) 2 அணா

19. டி.எம். ஹாமில்டன் தனது பதிலில் அரசாங்கம் எதற்கு வரியை இரட்டிப்பு மடங்காக்கி உள்ளது என தெரிவித்துள்ளார்?

(A) தபால்
(B) உப்பு
(C) நூல்
(D) சர்க்கரை

20. காந்திஜி பர்டோலி தீர்மானம் முடிவானது மாற்ற முடியாது என வைசிராய்க்கு எந்த தேதியில் எச்சரிக்கை விடுத்தார்?

(A) பிப்ரவரி 1
(B) ஜனவரி 8
(C) பிப்ரவரி 10
(D) மார்ச் 6

21. வெறும் வறட்டு சோறும் அழுக்கு உப்பும்தான் ஒரு வேலை சாப்பாடு என கூறியவர் யார்?

(A) ஹிக்கின் பாதம்
(B) வில்லியம் ஹண்ட்ரோ
(C) மாக்டொனால்டு
(D) போலக்

22. நிவாரண நிதியிலிருந்து எவ்வளவு தொகை ராட்டை வேலைக்காக செலவிடப் போவதாக காந்திஜி தெரிவித்தார்?

(A) ரூ. 8,000
(B) ரூ. 9,000
(C) ரூ. 7,000
(D) ரூ. 10,000

23. பகிஷ்காரம் என்ற சொல்லுக்கு காந்திஜி தெரிவித்தது என்ன?

(A) அந்நிய துணியை உபயோகிக்க மறுப்பது

(B) அந்நியர் பொருளை மறுப்பது

(C) அந்நியர் கிராமப் பொருளை மறுப்பது

(D) அந்நிய நீரை இறக்குமதி செய்வது

24. ரூ. 2,000க்கு முக்கியமாக எதனை விற்பது எங்கள் திட்டம் என காந்திஜி குறிப்பிடுகிறார்?

(A) பட்டு புடவை (B) நூல் புடவை

(C) கதர் புடவை (D) கிராம புடவை

25. ராட்டையின் மத்திய ஸ்தானம் என்று எதை காந்திஜி குறிப்பிடுகிறார்?

(A) கிராமம் (B) மாகாணம்

(C) நகராட்சி (D) ஜில்லா

26. சங்க காரியதரிசி இராஜாஜி காந்தியுடன் எத்தனை நாட்கள் சம்பாஷணை செய்து வந்தார்?

(A) 10 நாள் (B) 12 நாள்

(C) 2 நாள் (D) 7 நாள்

27. மில்களில் தீட்டிய எதை ஆரோக்கியத்திற்கு கேடு செய்கிறது என காந்திஜி தெரிவித்தார்?

(A) கோதுமை (B) வெள்ளையரிசி

(C) தவிடு (D) உமி

28. காந்திஜி கதரின் தூய்மை, ஜீவனசம்பளம், லாபநோக்கம் இல்லாமை என்ற மூன்றையும் கட்டுப்பாடு செய்யாவிட்டால் எது கேலி கூத்தாகிவிடும் என்று தெரிவித்தார்?

(A) மில்துணி விற்பனை (B) கதர் விற்பனை

(C) பட்டு விற்பனை (D) சோப்பு விற்பனை

29. அகிம்சை பூர்வமான கிராமப் பொருளாதாரத்தை நிலைநாட்ட எது அவசியம் என்று காந்திஜி கூறினார்?

(A) நெசவு (B) கதர்

(C) பட்டு (D) மில் துணி

30. ஸ்ரீ கேஸி என்பவர் யார்?

(A) வங்காள கவர்னர்
(B) ஜெர்மானியர்
(C) ஆங்கிலேயர்
(D) ஐரோப்பியர்

31. உத்தியோகங்களை விட்டு விட்டு நூற்க முட்பட வேண்டும் நான் சொல்லவில்லை என்பதை எந்த வாசகர்கள் அறிவதாக காந்திஜி கூறினார்?

(A) டைம்ஸ் ஆப் இந்தியா
(B) எங் இந்தியா
(C) கதரின் தத்துவம்
(D) கதர் பத்திரிக்கை

32. வட்டி வாங்குவதையும் பணம் திரட்டுவதையும் எது தடுக்கிறது என்று தோன்றுவதாக காந்திஜி தெரிவித்தார்?

(A) இந்து
(B) கிறிஸ்து
(C) இஸ்லாம்
(D) பாரசீகம்

33. தீமையான ஆட்சியில் செல்வம் படைத்திருப்பது பாவம் ஏழ்மையிலிருப்பதே அரசாங்கம் என்ற உண்மையை சொல்லியது யார்?

(A) ஹென்றி டேவிட் தோரோ
(B) எட்வர்ட் கார்பெண்டர்
(C) என்பிஸ்டன்
(D) எலிசபெத் ராணி

34. எந்த நாட்டு மில்களை சமாளித்து போட்டியிடுவது சுலபம் என்று காந்திஜி கூறினார்?

(A) ஜப்பானிய
(B) இத்தாலிய
(C) இந்திய
(D) ஆங்கிலேய

35. எந்த செல்வத்தை இந்தியா பெற்றிருப்பது போல வேறு எந்த நாடும் இல்லை என காந்திஜி தெரிவித்தார்?

(A) மனித சக்தி
(B) கேந்திர சக்தி
(C) கதர் சக்தி
(D) நூற்பு சக்தி

36. காந்தி இயக்கம் என்று கூறுவது உண்மையில் எந்த இயக்கம் என்று பொருள்படும்?

(A) கிராம இயக்கம்
(B) சுயராஜ்யம்
(C) கதர் இயக்கம்
(D) சுதேசி இயக்கம்

37. எதனை தரும்ஸ்தாபனம் என்று காந்திஜி தெரிவித்தார்?

(A) கதர் ஸ்தாபனம்

(B) கதர் நூற்போர் சங்கம்

(C) கதர் விற்பனை நிலையம்

(D) நூல் விற்பனை நிலையம்

38. தினமும் எட்டணா கூலி என்ற லட்சியத்தை அடையாமல் இருப்பதற்கு எது மூலகாரணமாக எதை அறிந்து கொள்ளவில்லை என காந்திஜி தெரிவித்தார்?

(A) பஞ்சடைப்பது

(B) கதர் விஞ்ஞானம்

(C) ராட்டை நூற்பு

(D) தறி நெய்வு

39. டாக்டர் பி.ஸி.ரே சாரியாகண்டியில் வர்த்தகமந்தம் என்று எதை குறிப்பிடுகிறார்?

(A) அரிசி கோதுமை விலை குறைவு

(B) அரிசி சணல் விலை குறைவு

(C) அரிசி வெல்லம் விலை குறைவு

(D) அரிசி பருப்பு விலை குறைவு

40. ''அருள் ஒளியே வழிகாட்டி'' என்ற தோத்திர கீதம் எழுதியவர் யார்?

(A) செயிண்ட் பிலிப்

(B) லார்டு கர்ஸன்

(C) லார்டு கார்டிஞ்சு

(D) கார்டினல் ஜான் ஹென்றி நியூமான்

41. காந்திஜி நமது மாமூல் உடையை விட்டுவிட்டு முழங்கால் வேட்டி அணிந்த இடம் எது?

(A) மதுரை

(B) சென்னை

(C) டெல்லி

(D) பம்பாய்

42. யந்திரயுகம் என்பதில் யந்திரம் என காந்திஜி எதனை கூறினார்?

(A) இயந்திரம் இயக்குபவரை

(B) நிர்வாகத்தை

(C) மனிதனை

(D) கிராம மக்களை

43. இந்தியா திரும்பியதும் காந்திஜி கதர் மறைந்தால் எது நிலைக்காது என்று கூறினார்?

(A) சுயராஜ்யம்
(B) சுதேசி
(C) சுதந்திரம்
(D) தியாகம்

44. கீழ்க்கண்டவற்றுள் பழைய கால பாணியில் கையால் செய்யப்படும் காகிதத்தால் செய்யப்பட்டது எது என காந்திஜி தெரிவித்தார்?

(A) பாட புத்தகம்
(B) கணக்கு புத்தகம்
(C) நோட்டுகள்
(D) பேப்பர்

45. காந்திஜி இந்து மத கோட்பாடுகளில் ஒன்று என எதனை தெரிவிக்கிறார்?

(A) பசு பராமரிப்பு
(B) மத பாதுகாப்பு
(C) கோட்பாடு
(D) தத்துவ கோட்பாடு

46. கண்காட்சி எந்த கூடங்களாக விளங்க வேண்டுமென்று மகாத்மா கூறினார்?

(A) கல்வி
(B) பயிற்சி
(C) தொழில்
(D) உற்பத்தி

47. "ஸ்காட்ச் மன்" பத்திரிக்கையிலிருந்து ஆங்கில நண்பர் கத்தரித்து அனுப்பிய கட்டுரை எது?

(A) நூற்பும் நெசவும்
(B) நூற்பும் நெய்வதும்
(C) தாளா நயத்தின் சிறப்பு
(D) நூற்பு வரலாறு

48. ஜம்தானி வேலை என்று எதனை காந்திஜி சொல்கிறார்?

(A) உயர்ந்த ரக நெசவு
(B) உள்நாட்டு நூற்பு
(C) உள்நாட்டு தறி
(D) அயல்நாட்டு தறி

49. தியாகத்திற்காக தினமும் குறைந்தபட்சம் எவ்வளவு நேரம் நூற்க வேண்டும் என காந்திஜி தெரிவித்தார்?

(A) 1/4 மணிநேரம்
(B) ஒரு மணிநேரம்
(C) 1/2 மணிநேரம்
(D) 2 மணிநேரம்

50. ராட்டையின் மூலம் நாம் சுயராஜ்யத்தை அடைந்து விட முடியும் என்று காந்திஜி எந்த ஆண்டு சொன்னார்?

(A) 1920 (B) 1921

(C) 1919 (D) 1918

51. கதர் ஊழியர் உதவி செய்பவராக இல்லை என்றால் இது தான் பொருள் என்று எதனை காந்திஜி கூறினார்?

(A) தறிக்கு முடிவு (B) நூற்புக்கு முடிவு

(C) கதருக்கு முடிவு (D) நெசவுக்கு முடிவு

52. ஸ்ரீ சுபேதாரின் திட்டத்திலிருந்து அரசாங்கம் மக்களுக்கு எதை கொடுக்க வேண்டும் என்று உள்ளது?

(A) ராட்டையும் தறியும் (B) ராட்டையும் தக்ளியும்

(C) ராட்டையும் நூலும் (D) தறியும் நூலும்

53. இந்தியா ஜனத்தொகையில் எத்தனை சதவிகிதம் பேர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளதாக காந்திஜி தெரிவித்துள்ளார்?

(A) 50 (B) 60

(C) 72 (D) 80

54. கதர் எதன் சின்னமாக இருக்கிறது என புதிய திட்டத்தின்படி காந்திஜி தெரிவித்தார்?

(A) அடிமைத்தனம் (B) பொருளாதார விடுதலை

(C) கிராம மக்கள் ராஜ்யம் (D) மில் துணி

55. அஹிம்சையின் சின்னம் என்பது எது?

(A) தறி (B) தக்ளி

(C) ராட்டை (D) கொடி

56. ராட்டைதான் சூரியன் அதை சுற்றிய கிரகங்கள்தான் மற்ற தொழில்களாக சுழல்கின்றன என்று தெரிவித்தவர் யார்?

(A) நேரு (B) வல்லபாய் படேல்

(C) ராஜாஜி (D) காந்திஜி

57. காந்திஜி எதனை பரவல் முறை என்று சொல்லமாட்டேன் என்று தெரிவித்தார்?

(A) வேட்டி ஏற்றுமதி (B) பருத்தி இறக்குமதி

(C) நூல் ஏற்றுமதி (D) பட்டு ஏற்றுமதி

58. அலகாபாத் லீடர் பத்திரிகையின் காலமான ஆசிரியர் யார்?

(A) சித்தரஞ்சன்
(B) சுரேஷ்பானர்ஜி
(C) ஸ்ரீசிந்தாமணி
(D) டென்னிஸன்

59. ராபின்ஸன் குருஸோ உலக புகழ் பெற்ற நாவலுக்கு எதுவாக உள்ளார்?

(A) தீரல் செயலன்
(B) கதாநாயகன்
(C) திறமையானவன்
(D) கொள்ளைக்காரன்

60. மற்றவர்களுக்கு தீமையாக இருக்கக்கூடியவை எல்லாவற்றையும் துறந்து விட வேண்டும் என்பதன் பொருள் என்ன?

(A) சுய ராஜ்யம்
(B) சுதந்திரம்
(C) கதர் உணர்ச்சி
(D) சுதேசி

61. குண்டூர் ஜில்லாவில் உள்ளவர்கள் நூற்பதை விட எதில் அதிக கூலி கிடைக்கும் என்று போவதாக காந்திஜி கூறினார்?

(A) நெல் குத்துவது
(B) சர்க்கரை ஆட்டுவது
(C) தோல்பொருள் தயாரிப்பது
(D) சோப்பு தயாரிப்பது

62. கதர் சுதந்திரத்தை அடைவதற்கு அஹிம்சை உபாயமாவதற்கும் முயன்று வருவதாகத் தெரிவித்தவர் யார்?

(A) காந்திஜி
(B) மோதிலால் நேரு
(C) இராஜாஜி
(D) படேல்

63. மாதத்திற்கு எத்தனை லட்சம் ரூபாய் கதரை உற்பத்தி செய்திருப்பதாக புள்ளி விபரம் காட்டுகிறது?

(A) 5 லட்சம்
(B) 10 லட்சம்
(C) 15 லட்சம்
(D) 20 லட்சம்

64. மில்கள் எதன் மூலம் கதரை விற்கலாம் என காந்திஜி கூறினார்?

(A) சங்கம்
(B) கடைகள்
(C) ஏஜெண்டுகள்
(D) மக்கள்

65. அரை மணி நேரமாவது ''தம்மை இந்தியர்'' என்று சொல்லிக் கொள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் என்ன செய்ய வேண்டும் என்று காந்திஜி கூறினார்?

(A) நெசவு செய்ய வேண்டும்

(B) கதர் விற்க வேண்டும்

(C) நூற்க வேண்டும்

(D) உழைக்க வேண்டும்

66. தென்னாப்பிரிக்காவில் பிளேக் கிருமிகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்ட எவ்வளவு மதிப்புள்ள மார்க்கெட் தீக்கிரையாக்கப்பட்டது?

(A) 10000 பவுன்

(B) 14000 பவுன்

(C) 12000 பவுன்

(D) 15000 பவுன்

67. பட்டினி கிடக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு எது கிடைக்க வேண்டும் என்பதற்காக காந்திஜி அந்நிய துணியை பகிஷ்காரம் செய்தார்?

(A) ராட்டை மூலம் வேலையும் சோறும்

(B) ராட்டை மூலம் நூற்பும் பணமும்

(C) தறி மூலம் துணியும் பணமும்

(D) மில்துணி மூலம் துணியும் பணமும்

68. காந்திஜி நாம் மூளையையும் இதயத்தையும் எதில் ஈடுபடுத்த வேண்டும் என்று தெரிவித்தார்?

(A) நெசவு வேலை

(B) நூற்பு வேலை

(C) கதர் வேலை

(D) உற்பத்தி வேலை

69. காந்திஜி சென்னைக்கு முதல் மந்திரியானவர் யார் என்று தெரிவித்தார்?

(A) நேரு

(B) பட்டேல்

(C) ஜான்சிராணி

(D) ராஜாஜி

70. சரியான நடைமுறை அடிப்படையில் அமைந்து நிலைமைக்கு பொருத்தமாக இல்லாது போனால் "கதர் தோல்வியடைந்தே தீரும்" என காந்திஜி எதனைக் குறிப்பிட்டார்?

(A) ஜவுளி உற்பத்தி

(B) பருத்தி இலை பக்குவம்

(C) போலி ஜவுளிகள் தயாரிப்பு

(D) கதர் கொள்கை

71. காந்திஜி கதர் கடைகள் எல்லாம் விற்பனை கடைகளாக இருப்பதை விட்டுவிட்டு என்னவாக இருக்க வேண்டும் என கூறினார்?

(A) தொழில் பயிற்சி நிலையம்

(B) சங்கம்

(C) நூற்போர் நிலையம்

(D) தறி நிலையம்

72. நெசவாளர் விசயத்திலும் ஏன் கட்டுப்பாட்டை கொண்டு வரக் கூடாது என காந்தியிடம் கேட்டவர் யார்?

(A) பாலாஜி ராவ்
(B) பியாரி லால்
(C) மதுசூதனன்
(D) இராஜாஜி

73. காந்திஜி தாம் செல்லும் இடங்களுக்கெல்லாம் தம்முடன் எடுத்து செல்வது எது?

(A) ராட்டை
(B) தறி
(C) தக்ளி
(D) நூல்

74. இறக்குமதி பொருள்களில் ரூ. 65 கோடிக்கு இறக்குமதி செய்த பொருள் எது என காந்திஜி தெரிவித்தார்?

(A) போலி பட்டு ஜவுளி
(B) சர்க்கரை
(C) உலோகப் பொருள்
(D) பருத்தி ஜவுளி

75. யார்க்ஷயரில் முதலாளிகளின் ஓய்வு விடுதி என காந்திஜி தெரிவித்தது எது?

(A) பண்ணை வீடு
(B) பங்களா வீடு
(C) ஹேய்ஸ் பண்ணை
(D) தோட்ட வீடு

76. எது தங்கமயமாக பிரகாசிக்கும் சூரியனாகிறது என்று காந்திஜி கூறினார்?

(A) தறி
(B) தக்ளி
(C) ராட்டை
(D) இயந்திரம்

77. விஞ்ஞான முறைப்படி தேனீ வளர்த்து சேகரிக்கப்படும் தேன் எது?

(A) காய்ச்சிய தேன்
(B) பாட்டில் தேன்
(C) ரா தேன்
(D) குற்றமற்ற தேன்

78. கிராம கைத்தொழில் என்னும் சூரிய மண்டலத்தில் சூரியனைப் போல் விளங்குவது எது என காந்திஜி கூறினார்?

(A) மில் துணி
(B) பட்டு துணி
(C) கதர்
(D) காடா துணி

79. வெகுநாள் உழைப்புக்கு பின் ஓய்வு எடுத்துக் கொள்ள உரிமை பெற்றவர் என யாரை காந்திஜி தெரிவித்தார்?

(A) பண்டித மாளவியாஜி
(B) அப்பாஸ் தயாப்ஜி
(C) விஜயராகவாச்சாரியார்
(D) ஸ்ரீஹரிதயாள பாபு

80. "நீ கட்டியிருக்கும் புடவை உனக்கு நன்றாக இல்லை என்ற எண்ணம் உனக்கு இல்லை என்றால், அதோடு நீ எங்கு வேண்டுமானாலும், எந்த விருந்துக்கும் போகலாம். அது உனக்கு அழகாகவே இருப்பதை நீ காண்பாய் என வாழ்த்தியவர் யார்?

(A) டாக்டர் ஸ்ரீ மாணிக்கபாய் பகதூர்
(B) ஜான்ஸிராணி பீகம்
(C) அதியா பீகம் ரகிமான்
(D) டாக்டர் ரவீந்திரநாத் தாகூர்

T.C.158

# 138/DM/19

| பதிவு எண் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMETAL EXAMINATIONS

## DEPARTMENTAL TEST FOR MEMBERS OF THE STAFF OF THE TAMIL NADU KHADI AND VILLAGE INDUSTRIES BOARD-FIRST PAPER ON GANDHIJI'S COLLECTED WORKS VOLUME – V (TAMIL) (TAMIL VERSION ONLY)

(With Books)

Maximum Time : 30 minutes

Maximum Marks : 20

## *IMPORTANT INSTRUCTIONS*

### விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

ஏதேனும் <u>நான்கு</u> வினாக்களுக்கு மட்டும் பதில் அளிக்கவும். **$(4 \times 5 = 20)$**

1. அந்நிய துணியும் கதரும் பற்றி காந்திஜி தெரிவித்த கருத்துகள் யாவை?

2. அத்தாட்சி பெற்ற கதரின் பொருள் குறித்து காந்திஜி தெரிவித்த கருத்தினை விளக்குக.

3. யந்திர நூற்பும் கை நூற்பும் பற்றிய நண்பர் கருத்துக்கு காந்திஜி கூறுவது என்ன? விவரிக்கவும்.

[Turn over

4. சுயதேவை கதர் பற்றி காந்தியடிகள் கூறுவது என்ன?

5. தனுஷ் தக்ளி பற்றி காந்தியடிகள் கூறுவது என்ன?

6. கையினால் நூற்பது தீவிரமாக பரவ முக்கியமான மூன்று சாத்தியக் கூறுகள் எவை?